ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
ජාතික ඇගයීම් හා පරීක්ෂණ සේවාව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
Department of Examinations, Sri Lanka
NATIONAL EVALUATION AND TESTING SERVICE

පැලවත්ත, බත්තරමුල්ල.
பெலவத்தை, பத்தரமுல்ல
Pelawatta, Battaramulla.

දුරකථන / தொலைபேசி / Telephones: 2786200, 2784201, 2785202, 2784203, 2784204, 2786205, 2784206,
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: 011-2785220
තැපැල් ලිපිනය / அஞ்சல் முகவரி / POSTAL ADDRESS: තැ.පෙ. 1503, කොළඹ / த.பெ. 1503 கொழும்பு / P.O.Box 1503 Colombo
අන්තර්ජාල ලිපිනය / இணையதள முகவரி / Internet Address: www.doenets.lk
E-mail : examd@sltnet.lk


මගේ අංකය / எமது இல / My No: 6/16/AL/PRAC/2025
ඔබේ අංකය / உமது இல / Your No: ..............................
දිනය / திகதி / Date: 2025.09. 25

சகல அதிபர்களுக்கும்,

## க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை – 2025
## செய்முறைப் பரீட்சைக்குப் பரீட்சகர்களைத் தெரிவுசெய்வதற்கான தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்

மேற்படி பரீட்சைக்கு செய்முறைப் பரீட்சைக்கான பரீட்சகர்களைத் தெரிவு செய்வதற்காக நிகழ்நிலையில் தயாரிக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவம் பரீட்சைத் திணைக்கள இணையத்தளத்தில் (www.donets.lk) வெளியிடப்பட்டுள்ளது. நிகழ்நிலையில் (Online) விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்தி செய்து விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியை நீங்கள் உறுதிப்படுத்தி **2025.10.10** ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியவாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். நிகழ்நிலையில் விண்ணப்பப்படிவங்களை பூர்த்திசெய்வது தொடர்பான அறிவுறுத்தற் பத்திரம் (இணைப்பு 01) இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அரச அல்லது அரசினால் அனுமதிக்கப்பட்ட தனியார் பாடசாலையொன்றில் நிரந்தர சேவையிலுள்ள ஆசிரியர் மட்டுமே செய்முறைப் பரீட்சைக் குழுவிற்கு விண்ணப்பிக்க முடியும். (இணைப்பு 01 ஐப் பார்க்கவும்)

02. தகைமைகள், சிரேஷ்ட நிலை என்பவற்றின் அடிப்படையில் பின்வரும் பாடங்களுக்கான நியமனங்கள் வழங்கப்படும்.

- 28 - மனைப்பொருளியல்
- 52 - நாட்டியம் (தேசிய)
- 53 - நடனம் (பரதம்)
- 54 - கீழைத்தேய சங்கீதம்
- 55 - சங்கீதம் (கர்நாடகம்)
- 57 - நாடகமும் அரங்கியலும் (சிங்களம்)
- 58 - நாடகமும் அரங்கியலும் (தமிழ்)
- 65 - பொறியயற் தொழில்நுட்பவியல்
- 66 - உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்

03. 28 - மனைப்பொருளியல், அழகியல் பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சை நிலையங்கள் பின்வரும் மாவட்டங்களில் தாபிக்கப்படும்.

**கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, இரத்தினபுரி, கேகாலை, குருநாகல், புத்தளம், அநுராதபுரம், பொலன்னறுவை, மாத்தளை, கண்டி, நுவரெலியா, பதுளை, மொனராகலை, அம்பாறை.**

04. 65 - பொறியியற் தொழில்நுட்பவியல், 66 - உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் ஆகிய பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சை நாட்டின் சகல மாவட்டங்களிலும் இடம்பெறும்.

4.1 65 - **பொறியியற் தொழில்நுட்பவியல் பாட செய்முறைப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கவுள்ள ஆசிரியர்களுக்கான தகைமைகள்**

- வடிவமைப்பும் தொழில்நுட்பவியலும் பாடத்திற்கான நியமனம் பெற்றவர் அல்லது
- பொறியியற் தொழில்நுட்பவியல் பாடம் கற்பிப்பவராயிருத்தல் அல்லது
- மேற்குறித்த பாடத்தில் கற்பித்தலில் தேசிய டிப்ளோமாதாரி ஆசிரியர் அல்லது தொழில்நுட்பப் பயிற்சி பெற்ற ஆசிரியராயிருத்தல்.

4.2 66 - **உயிர் முறைமைகள் பாட தொழில்நுட்பவியல் செய்முறைப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கவுள்ள ஆசரியர்களுக்கான தகைமைகள்**

- உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் பாடத்திற்கான நியமனம் பெற்றவர் அல்லது
- விஞ்ஞானத்தில் விசேட பட்டம் (விவசாய விஞ்ஞானம்) அல்லது
- விஞ்ஞானத்தில் பட்டம் (உயிரியல் விஞ்ஞானம்) பெற்ற பட்டதாரி ஆசிரியராயிருத்தல்.

05. தாம் வதியும் மாவட்டம், சேவை செய்யும் மாவட்டம், கடந்த வருடம் பணியாற்றிய மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டத்தில் பணியாற்றுவதற்கு விண்ணப்பித்தல் வேண்டும். இச்செய்முறைப் பரீட்சைப் பணிக்கு பரீட்சகராகத் தெரிவு செய்யப்பட்டால் நியமிக்கப்படும் எந்தவொரு மாவட்டத்திலும் பணியாற்றுவதற்குத் தயாராயிருத்தல் வேண்டும்.

06. விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நேரஅட்டவணை சரியானது என அதிபரால் தனிப்பட்ட முறையில் சரிபார்த்து உறுதிப்படுத்தப்படல் வேண்டும். இதற்கு முன்னைய சந்தர்ப்பங்களில் ஆசிரியர்களால் விண்ணப்பப்படிவத்தில் தவறான தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளன. எனவே அவ்வாறான பொய்யான அல்லது தவறான தகவல்கள் தரப்பட்டுள்ளமை கண்டறியப்படின், உறுதிப்படுத்தும் அலுவலராக நீங்களே இது தொடர்பாகப் பொறுப்பேற்க வேண்டும் என்பதையும் உறுதிப்படுத்தும் அதிகாரத்தை வேறொருவருக்கு கையளிக்க வேண்டாம் என்பதையும் மேலும் அறியத் தருகின்றேன்.

07. உங்களால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் சகலவற்றையும் ஒரே உறையிலிட்டு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

முகவரி : **பரீட்சை ஆணையாயர் நாயகம்,**
பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை,
இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்த, பத்தரமுல்ல.

**(கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "2025 க.பொ.த. (உ.த) செய்முறைப் பரீட்சை" எனக் குறிப்பிடவும்.)**

ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே
பரீட்சை ஆணையாளர் நாயகம்

பிரதிகள் :

1. சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள் - த.தே.ந.மே.
2. சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் - த.தே.ந.மே.

இணைப்பு 01

**இலங்கை பரீட்சைத் திணைக்களம்**
**பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை**

# க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை - 2025 செய்முறைப் பரீட்சைக்கான பரீட்சகர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்களை நிகழ்நிலையில் (Online) பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

01. விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்தும் போது உண்மையான தகவல்களை வழங்குதல் வேண்டும். உண்மைக்கு மாறான தகவல்களை உள்ளடக்குவோர் நிரந்தரமாக பரீட்சைப் பணிகளிலிருந்து நீக்கப்படுவர்.

02. செய்முறைப் பரீட்சகர் குழுவிற்கு விண்ணப்பிக்கும் அலுவலரின் குடும்ப உறுப்பினரொருவர் அல்லது வீட்டில் வதிபவர் ஒருவர் மேற்படி பரீட்சையின் செய்முறைப் பரீட்சைப் பாடங்களுக்குத் தோற்றுவாராயின் அவ் அலுவலர் இப்பரீட்சைக் குழுவிற்காக **விண்ணப்பிக்கக் கூடாது.**

03. இப் பாடங்களுக்காக பிரபல்யமான தனியார் வகுப்புக்கள் நடத்தும் அலுவலர் எவரும் இப் பரீட்சைக் குழுவின் எப்பதவிக்கும் **தகுதியற்றவராதலால் விண்ணப்பித்தலாகாது.** அரச அல்லது அரசினால் அனுமதிக்கப்பட்ட தனியார் பாடசாலையொன்றில் நிரந்தர சேவையிலுள்ள ஆசிரியர் மட்டுமே செய்முறைப் பரீட்சைக் குழுவிற்கு விண்ணப்பிக்க முடியும்.

04. **65 - பொறியியற் தொழில்நுட்பவியல் பாடத்துக்கு மட்டும் பின்வரும் தொழிற்பயிற்சி நிறுவனங்களின் விரிவுரையாளர்கள் விண்ணப்பிக்கலாம்.**

- தேசிய பயிலுனர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை
- தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்
- தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்
- இலங்கை ஜேர்மன் தொழிற்கல்வி நிறுவகம்
- இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை

05. நிகழ்நிலையில் விண்ணப்பிப்பதற்காக https://www.eservices.exams.gov.lk/pratical என்ற இணைப்பினூடாகப் பிரவேசிக்கவும். அதன் பின்னர் First Name, Last Name, Email address, NIC Number, Mobile Number ஆகிய தகவல்களை உள்ளடக்கவும்.

(தகவல்களை உள்ளடக்கிய பின்னர் எதுவித மாற்றமும் செய்ய முடியாத காரணத்தினால் தேசிய அடையாள அட்டை எண்ணையும் கையடக்க தொலைபேசி எண்ணையும் சரியாக உள்ளடக்கவும்.)

மேற்குறித்த தகவல்களை உள்ளடக்கி "Register" இற்குப் பிரவேசிப்பதன் மூலம் உங்கள் செல்லிடத் தொலைபேசி எண்ணுக்கு "OTP" எண்ணொன்று கிடைக்கப்பெறும். அந்த "OTP" எண்ணைக் குறிப்பிட வேண்டிய இடத்தில் உரிய "OTP" எண்ணைக் குறிப்பிட்டு "Verify" செய்யவும். அதற்குப் பின்னர் படிவத்திற்குப் பிரவேசிக்க முடியும்.

06. "Register" செய்த பின்னர் "Personal Details, Professional Details, Other Details" ஆகிய தகவல்களை முறையாகப் பூரணப்படுத்தி ''Submit'' செய்யவும்.

07. "Submit" செய்த பின்னர் உங்களுக்குக் கிடைக்கப்பெறும் "PDF" வடிவத்தில் அச்சுப்பிரதியொன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும். உங்களால் நிரப்பப்பட வேண்டிய பகுதிகள் சரியாக **பூரணப்படுத்தப்படவில்லையாயின்** "Submit" செய்ய முடியாது போலாம். எனவே "Submit" செய்ய முன்னர் மீண்டும் முன்பக்கங்களை சரிபார்த்து உறுதிபடுத்திக் கொள்ளவும்.

"Submit" செய்த பின்னர் கிடைக்கப்பெறும் "PDF" படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறியீட்டு எண்ணை (Serial No) உங்கள் பொறுப்பில் வைத்துக் கொள்ளவும்.

08. அதன் அச்சுப்பிரதியில் (PDF படிவத்தில்) இலக்கம் 10 **தொடக்கம்** 13 **வரையான பகுதிகளை** கையெழுத்தில் பூரணப்படுத்தி நிறுவனத் தலைவர்/அதிபர் மூலமாக உறுதிப்படுத்தி அவரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

09. நீங்கள் விண்ணப்பிக்கும் மாவட்டத்திற்கு மேலதிகமாக நாடளாவிய ரீதியிலுள்ள வேறு எந்த மாவட்டத்திலாயினும் பணியாற்ற **விரும்புகின்றீர்களா? இல்லையா? என்பது தொடர்பாக நன்கு விளக்கம்பெற்று** பூரணப்படுத்துக.

10. நீங்கள் இதற்கு முன்னர் **பிரதம/உதவிப் பரீட்சகராக** பணியாற்றியிருப்பின், பணியாற்றிய வருடங்களின் எண்ணிக்கையைக் கண்டிப்பாகக் குறிப்பிடவும். அனைக் குறிப்பிடாவிடில் பரீட்சகர்களைத் தெரிவு செய்யும் போது உங்களுக்குரிய வாய்ப்பு கிடைக்காது போகலாம்.

11. சரியாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

12. உரிய நிறுவனத் தலைவர்/அதிபர் மூலமாக இலக்கம் 14 **இனைப்** பூரணப்படுத்திய பின்னர் சகல விண்ணப்பப்படிவங்களையும் ஒரே உறையிலிட்டு 2025.10.10 ஆம் திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**பரீட்சை ஆணையாளர் நாயகம்,**
**பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை,**
**இலங்கை பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை, பத்தரமுல்ல**

13. முகவரி எழுதிய உறையின் இடது பக்க மேல் மூலையில் **"2025 க.பொ.த. (உ.த) செய்முறைப் பரீட்சை"** எனக் குறிப்பிடவும்.

14. இவற்றுக்கு மேலதிகமாக உங்களுக்கு ஏதேனும் தகவல்கள் தேவைப்படின் பின்வரும் தொலைபேசி எண்களூடாக **பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளையுடன்** தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு இலக்கங்கள் : 0112784226 **(கணினிக் கிளை)**

**0112784208 / 0112784537** (பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை)